දුරකථන
தொலைபேசி
Telephone ) 0112669192 ,0112675011
0112698507 , 0112694033
) 0112675449 ,0112675280

ෆැක්ස්
பெக்ஸ்
Fax ) 0112693866
) 0112693869
)0112692913

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல் முகவரி
e-mail )postmaster@health.gov.lk
)

වෙබ් අඩවිය
இணையத்தளம்
website ) www.health.gov.lk
)

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

මගේ අංකය
எனது இல
My No. ) CF/EXW/05/2021

ඔබේ අංකය
உமது இல
Your No. : )

දිනය
திகதி
Date ) 2021.07...16.

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

---

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02-59/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் இலங்கை தேசிய வைத்தியசாலை

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

உரிய நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

## அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2020 (இரண்டாம் தடைவ)

சுகாதார அமைச்சில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு செய்யப்பட்டு 03 வருடத்திற்குள் சித்தியடைய வேண்டிய வினைத்திறன் தடைப்பரீட்சை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் ஆம் திகதி நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. திகதி, நேரம் மற்றும் பரீட்சை நடைபெறும் நிலையம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறித்து அனுப்பிவைக்கப்படும்.

02. தகைமைகள் :-

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் II ஆம் தரத்திற்கு 2020.06.30 ஆம் திகதிக்கு முன் பதவி உயர்வு பெற்று இதுவரை இப் பரீட்சையை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : விண்ணப்பம் கிடைக்கப்பெறும் கடைசி தினமான 2020.12.31 திகதியுடன் II ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

குறிப்பு: (i) இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்குவர முன்னர் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்ற, இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் தரம் II இற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் கீழ் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிருவாகம் ஆகிய பாடங்களில் சித்தியடைய வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

(ii) முன்னைய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக தரம் II வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் எந்தவொரு விடயத்திற்கும் தோற்றாது / உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II ற்கு ஏற்புடைய சகல விடயங்களிலும் சித்தியடைய வேண்டும்.

(iii) அலுவலர்கள் தமது விருப்பத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக மற்றும் ஒன்றுக்கொன்று வெவ்வேறான தடவைகளில் தோற்ற முடியும்.

தோற்றும் மொழி :

அலுவலர் தான் குறித்த சேவையில் இணைவதற்காகப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தின் அல்லது அரச கரும மொழியொன்றில் வினாப்பத்திரங்களு விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் இணைந்தவர்கள் தாம் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

இடைக்கால ஏற்பாடுகள் :

1. தரம் II ற்குரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை

(i) அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் நடைமுறைக்கு வர முன்னர் 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2013.04.02 ஆம் திகதி முதல் நடைமுறையிலிருந்த அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் தரம் II இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகக் கருதப்படுவதுடன், மேற்படி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் தரம் II இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்யாத, எனினும் மேற்படி பரீட்சையில் (1) அலுவலக முறைமை மற்றும் ஒழுங்கு முறை (2) அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறைகள் ஆகிய பாடங்களில் ஒன்று அல்லது இரண்டிலும் சித்தியடைந்த அல்லது விதிவிலக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் குறித்த பாடங்களில் பாடத்திலிருந்து பாடத்திற்கு எனும் அடிப்படையில் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(ii) அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் நடைமுறைக்கு வரமுன்னர் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்ட அலுவலர்கள், தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டு 06 வருடங்கள் (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் கீழ் பெற்றுக் கொண்ட வாய்ப்புக்கள் உள்ளடங்களாக) பூர்த்தியாவதற்குள் தரம் II இற்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

03. விண்ணப்பங்கள் :-

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கு **2021.08.20** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத் தலைவரினால் சான்றுபடுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின்

முகவரியிடப்பட்ட ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட"9x4" கடித உறை இரண்டினையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க கூடியவாறும் இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிகரிக்கப்படும்.

## 04. பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

## 05. பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

## 06. பரீட்சை பாடத்திட்டம்

இவ் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையானது அலுவலக முறைமைகளும், அலுவலக ஒழுங்கு முறைகள் மற்றும் அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள், சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் நிருவாகம் எனும் அமைப்பு கட்டுரை வினாக்கள் கொண்ட மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்துள்ளது. நேரம் 02 மணித்தியாலம். 08

III - நி.பி. III ஆம் அத்தியாயம் - நிதி முகாமைத்துவமும் வகைப்பொறுப்புத் தன்மை
IV - நி.பி. IV ஆம் அத்தியாயம் - பெறுகை
V - நி.பி. XIII ஆம் அத்தியாயம் - வழங்கல் மற்றும் வேலைச் சேவைகள்

**07:3** சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிருவாகம் வினாத்தாள்

**I** - சுகாதார மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் நோக்கங்கள்
**II** - நேர்வரிசை அமைச்சின் மற்றும் மாகாண சபைகளின் சுகாதார சேவைகள் கட்டமைப்பு
**III** - சுகாதார துறையின் அடிப்படை அம்சங்களும் அது சம்பந்தமான நிறுவனங்களும்
**IV** - நோயாளர்களுக்கான உபசரணைச் சேவையின் கட்டமைப்புசார் வளர்ச்சி
**V** - வைத்தியசாலையின் செயற்பாடு
**VI** - சமைக்காத உணவுகளுக்கு கட்டளையிடல், கையேற்றல், சமைத்த உணவுகளின் தரம் பற்றிய பரிசோதனை
**VII** - மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கல் மற்றும் ஏனைய வழங்கல்கள்.
**VIII** - மருத்துவ புள்ளிவிபர முகாமைத்துவம்
**IX** - மருத்துவ நிறுவனங்களின் தொடர்பாடல் செயற்பணி மற்றும் பொதுசன தொடர்பு
**X** - வைத்தியசாலைக் கட்டணம் மற்றும் தோட்ட உற்பத்தித்திறன்,
**XI** - வைத்தியசாலைகளின் விஷேட பிரிவுகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட விஷேட வியாபாரங்கள் பற்றிய அறிவை அளவிடுவதற்கான வினாத்தாளைக் கொண்டதாகும்.

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் கடமையாற்றும் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் II ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு அறியத் தரவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

கவனிக்கவும் : சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்றுநிறுபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழி மூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

ஷாமிக எச். கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)II
செயலாளருக்காக
காதாரம் அமைச்சின்.

**EXW**

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப் படிவம்

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் **II** ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2020 (இரண்டாம் தடைவ)

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( தமிழில்) :........................................................

..................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்) :

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்): ........................................................

..................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

(ஆ) i. தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்ட / உள்ளீர்ப்பு செய்யப்பட்ட கடித இலக்கம் மற்றும் திகதி : ..........................................................................................

ii. தற்பொழுது பெறும் வருடாந்த சம்பளம்: ..................................................

iii தொலைபேசி இலக்கம்:

iv. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னாள் உள்ள கூண்டினுள் (√) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (X) குறியை இடவும்.

அலுவலக முறைமைகளும், அலுவலக ஒழுங்கு முறைகள் ☐

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள் ☐

சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிருவாகம் ☐

03. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் (தமிழில்) ..................................................

(ஆங்கிலத்தில்) ..................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் :..................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் -..................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட "9×4" அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை இரண்டு இணைக்கப்பட்டுள்ளதா?..................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) : ..................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) :..................................................

**04.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ……………………………………………

**05.** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ……………………………………………

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ……………………………

| முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால்* ரூபா …………………… பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி …………………

…………………………………

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………..

திகதி

………………………………

பெயரும், கையொப்பமும்

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி* ……………………………………………… என்பவர் ………………………….. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ……………………………

……………………………

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

09. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி* ………………………… என்பவர் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் **II** ஆம் தர உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………

………………………………………

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்

இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.